இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கல்விப் பீடம்
முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி
இறுதிப் பரீட்சை – 2020/2021

**EPU 5256 – ஆரம்பக் கல்விக்கான சிறுவர் உரிமை**

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

திகதி : **28/01/2023** நேரம்: பி.ப 1.30 – பி.ப 3.30

## பகுதி I

1. காலணித்துவத்திற்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் சிறுவர்களின் நிலையை சுருக்கமாக விளக்குக.

2. 'பிள்ளைகள் பற்றிய மேம்பட்ட தத்துவம்' என்பதனால் கருதப்படுவது யாது?

3. இலங்கையில் பாடசாலைப் பிள்ளைகளின் சுகாதார, ஊட்டச்சத்து நிலை தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவக் கூடிய முறைகள் ஐந்தினை (05) குறிப்பிடுக.

4. ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளின் உயிர் வாழ்தலுக்கான உரிமையைப் பாதுகாப்பதில் ஆரம்ப வகுப்பு ஆசிரியரின் ஐந்து (05) கடமைகளை எழுதுக.

5. ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளின் வளர்ச்சியையும் விருத்தியையும் உறுதிப்படுத்த பெற்றோர் அமுல்படுத்தக்கூடிய உபாயங்கள் ஐந்தினை (05) சுருக்கமாக விளக்குக.

6. 'விசேடமான சூழ்நிலையில்' வைக்கப்பட வேண்டிய பிள்ளைகள் யாவர்?

7. 'பங்கு கொள்வதற்கான உரிமை பிள்ளைகளின் ஓர் உரிமையாகும்'
இக் கூற்றினை சுருக்கமாக விளக்குக.

8. சிறுவர் உரிமை தொடர்பான தொடர்பாடல்களின் செயல்திறனில் தடையாக உள்ள மூன்று (03) காரணிகளை குறிப்பிடுக.

(5x8 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9.

i. ‘சிறுவர் உரிமை’ என்பதனை வரையறுக்க.
(03 புள்ளிகள்)

ii. சிறுவர் உரிமை சாசனம் என்றால் என்ன?
(07 புள்ளிகள்)

iii. சிறுவர் உரிமை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர் உரிமை கொத்தனிகள் யாவை?
(10 புள்ளிகள்)

10.

i. தத்தெடுத்தல் என்றால் என்ன?
(02 புள்ளிகள்)

ii. பிள்ளைகளைத் தத்தெடுத்தல் தொடர்பான சட்ட மூலத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு (04) விடயங்களை சுருக்கமாக விளக்குக.
(08 புள்ளிகள்)

iii. இலங்கையில் சிறுவர்களை தத்தெடுத்தல் சட்டமூலத்தினை மீறல் தொடர்பான விடயங்களை ஆராய்க.
(10 புள்ளிகள்)

11.

i. ‘பாதுகாப்பிற்கான உரிமை’ என்பதனால் கருதப்படுவது யாது?
(02 புள்ளிகள்)

ii. வீட்டுச் சூழலில் ஆரம்ப வயதுப் பிள்ளைகளின் பாதுகாப்பிற்கான உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் மூன்றினை (03) உதாரணங்களுடன் விளக்குக.
(08 புள்ளிகள்)

iii. மேலே நீங்கள் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களை இழிவளவாக்கக்கூடிய முறைகள் மூன்றினை (03) விபரிக்க.
(10 புள்ளிகள்)

12.

i. ‘சிறுவர் துஷ்பிரயோகம்’ என்றால் என்ன?
(02 புள்ளிகள்)

ii. ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களை தடுக்க ஆசிரியர் கையாளக்கூடிய உபாயங்கள் நான்கினை (04) பட்டியலிடுக.
(08 புள்ளிகள்)

iii. மேலே நீங்கள் குறிப்பிட்ட உபாயங்களை அமுல்படுத்தும் போது ஆசிரியர்கள் எதிர்நோக்கக்கூடிய நான்கு (04) பிரச்சினைகளை சுருக்கமாக விளக்குக.
(10 புள்ளிகள்)

13.

i. சிறுவர் உரிமை தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய உபாயங்கள் நான்கினை (04) குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

ii. இவ் உபாயங்களை அமுல்படுத்தும் போது இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ளக்கூடிய பிரச்சினைகள் நான்கினை (04) சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

iii. மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளில் இருந்து விடுபட நான்கு (04) விதப்புரைகளை முன்வைக்க.

(08 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது